# கொபய்கனே பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 29 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 07 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 09 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கொபய்கனே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(அ) பௌதீக திட்டமிடல் பாதைகள் மற்றும் கட்டட நிகழ்ச்சித் திட்டத்தில் மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவுகள் ரூபா 16,295,500 எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 18,137,760 என ரூபா 1,842,260 மிகையாக காட்டப்பட்டிருந்தது. அத்துடன் ஆண்டிற்கான மூலதன உதவி ரூபா 2,659,870 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான கட்டடமொன்று வெளிசாராருக்கு சாட்டப்பட்டமை தொடர்பாக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 6,458,420 இற்கான தொகையொன்று மூலதன வருமானங்களில் கீழ் எடுக்கப்படாமல் மீண்டுவரும் வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் அச் சொத்துக்களின் புத்தகப் பெறுமதியாகிய ரூபா 630,000 இற்கான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் இருந்து அகற்றப்படாமையால் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கு மற்றும் நிலையான சொத்துக் கணக்கு அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) ஆண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 2,707,744 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 3,500,000 தொகை என ரூபா 792,256 மிகையாக எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) (கணக்கு பட்டோலையின் பிரகாரம்) வருட இறுதியில் காணி மற்றும் கட்டடங்களின் பெறுமதி ரூபா 24,710,238 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 24,046,048 தொகை என ரூபா 664,190 குறைவாக எடுக்கப்பட்டிருந்தது.

(உ) ஆண்டு இறுதியில் உள்ளவாறு வைப்புக்களில் மீதி ரூபா 3,040,689 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 2,287,672 என ரூபா 753,017 குறைவாக எடுக்கப்பட்டிருந்தது.

1.3.2 எதிர்பாராத பொறுப்புக்கள்

-----------------------------------------

பிரதேச சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள ஊழியர்கள் தொடர்பாக சபையினால் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை முறைப்படி செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டு இறுதி வரை அந் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 495,632 ஆக காணப்பட்டது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுபாட்டு கணக்குகள்

-------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக பில் போடப்படல், பெறுவனவுகள் மற்றும் ஆரம்ப மீதியின் கீழ் 14 கணக்கு விடயங்களின் பிரகாரம் மற்றும் தொடர்புடைய பதிவேடுகளின் பிரகாரம் நேரொத்த பெறுமதி இடையே ரூபா 2,690,969 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 20,224,092 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 4,185,330 தொகை ஒரு வருட காலத்தை விஞ்சியவையாகும்.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 21,446,545 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 2,545,862 தொகை ஒரு வருட காலத்தை விஞ்சியவையாகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-------------------------------------------------------------

தேவையான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 7,731,769 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விரிவாக பரிசோதனை மேற்கொள்ளவதற்கு முடியாதிருந்தது.

1.3.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது 6 கணக்கு விடயங்களின் கணக்கு மீதி மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பதிவேடுகளின் மீதிகளை சமப்படுத்துவதற்காக 4 சந்தர்பங்களில் ரூபா 2,691,972 தொகை திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்த 02 சந்தர்ப்பங்கள் ரூபா 1,631,791 தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக முறையான பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் முறையான அங்கீகாரமும் பெற்றிருக்கவில்லை.

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,854,948 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 683,497 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 6,171,451 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது. இந்த நிதி விளைவிற்கு ரூபா 23,695,530 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 28,301,855 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 2,248,623 வரை குறைந்துள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற் கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானம் ஆகிய ரூபா 31,359,108 இல் நூற்றிற்கு 89 ஆகிய ரூபா 27,813,516 தொகை உருவாக்கிய வருமானம் அல்லாத நீதி மன்றத் தண்டப் பணம், முத்திரை கட்டணம், சம்பள மீளளிப்புக்கள் ஆகிய படிகள் தன்மையுள்ள பெறுவனவுகள் அடங்கியுள்ளது. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 23,695,530 இன் நூற்றிற்கு 58 என ரூபா 13,635,630 தொகை ஒன்று கமநெகும, வயம்ப புபுதுவ போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களில் இருந்து அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்காக கிடைத்த பணமாகும்.

(ஆ) மீளாய்வாண்டு தொடர்பாக சபையின் மொத்த மீண்டுவரும் செலவு ஆகிய ரூபா 24,504,160 இல் நூற்றிற்கு 69 என ரூபா 16,829,409 தனிப்பட்ட சம்பளச் செலவாக காணப்பட்டதுடன், அவற்றில் நூற்றிற்கு 84 என ரூபா 14,103,238 தொகை சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரிடம் கிடைத்திருந்த ஏனைய வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் மூலதன செலவுகளாகிய ரூபா 28,301,855 இன் நூற்றிற்கு 64 ஆகிய ரூபா 18,137,760 இற்கான தொகை கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது ஏனைய நிறுவனங்களின் ஏற்பாடுகளில் இருந்து மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்களுக்காக செலவிடப்பட்டிருந்த பணமாகும்.

2.3 வருமான நிருவாகம்

--------------------------------

2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றுகை

----------------------------------------------------------------

வியாபார அனுமதிப்பத்திரம், வர்த்தக வரி, கடை வாடகை, வாடகை போன்ற வருமானங்கள் வெளிக்களத்தில் சேகரிப்பதற்காக குறிப்பிட்ட அதிகாரம் ஒன்று வழங்கப்பட்டிருக்கவில்லை எனினும், சபையின் வருமானம் சேகரிப்பாளரினால் வருடம் பூராகவும் வீதவரி மற்றும் வியாபார அனுமதிப் பத்திரம் போன்ற வருமானங்கள் வெளிக்களத்திலேயே சேகரிக்கப்பட்டிருந்தது.

2.3.2 வீதவரி

-----------

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 32 – 42 வரையான விதிகளின் பிரகாரம் காலாண்டு அடிப்படையில் நிலுவை பட்டியல் தயாரிக்கப்பட்டு குறிப்பிட்ட அறிவித்தல் வழங்கப்பட்ட பின்னர் ஆதனங்களை தடைசெய்து நிலுவை வீதவரியை அறவீடு செய்யும் செயற்பாடு ஒன்று அமுல் நடத்தப்பட வேண்டும். எனினும், நிலுவை பட்டியல் தயாரிப்பதற்கு பதிலாக வீதவரி பதிவேட்டின் பக்கத்தினை நிழல் பிரதி செய்து எழுத்தானை ஏதேனும் இன்றி வெளிக்களத்தில் பணம் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு சபையினால் 2 வீதிகள் தொடர்பாக ரூபா 100,789 இற்கான நிலுவைகளுக்காக 30 இறுதி அறிவித்தல்கள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 23 அலகுகளில் இருந்து ரூபா 66,227 தொகை ஒன்று அறவிடப்பட்டிருந்தது.

2.3.3 வர்த்தக வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------------

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் விதி 59 – 67 வரையான பிரிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 150(1) மற்றும் 152(1) பிரிவுகளின் படி கைத்தொழில் உரிமையாளர்கள் மற்றும் வியாபாரிகளிடம் குறிப்பிட்டுள்ளவாறு வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. உரிமையாளர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த வரியினை 07 நாட்களில் செலுத்தும்படி விதித்து பி.ச. 26B படிவத்தின் பிரகாரம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மைகள்

-------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கொபய்கனே பொலிஸ் நிலையம் நடத்தப்பட்டிருந்த சபைக்கு சொந்தமான காணி பொலிஸ் நிலையத்திற்கு சாட்டப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு சபைக்குச் சொந்தமான ஆதனங்கள் சாட்டுதல் மேற்கொள்வதற்காக சட்ட ரீதியான ஏற்பாடுகளின் மூலம் சாட்டப்பட்டுள்ளன என அவதானிக்கப்படவில்லை. மேலும் இது தொடர்பாக பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்தில் மதிப்பீடு ஒன்று பெற்றிருக்கவில்லை அத்துடன், உள்ளூராட்சி திணைக்களத்திற்கும் அறிவூட்டியிருக்கவில்லை. 2010 ஆண்டு தொடர்பாக ரூபா 5,000,000 மதிப்பீடு ஒன்று அடிப்படையாக கொண்ட தாமத

தண்டப்பணத்துடன் ரூபா 6,458,421 தொகைக்கு குறிப்பிட்ட ஆதனங்களை 2013 ஆண்டின் போது பொலிஸாருக்கு சாட்டப்பட்டுள்ளது. அதே போல் இவ்வாறு கிடைத்த பணத்தில் ரூபா 2,500,000 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் மீதியாக உள்ள ரூபா 3,958,421 தொகையும் சபையின் அன்றாட நிருவாக விடயங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் 2008 – 2011 காலப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 114 கட்டட விண்ணப்பங்களுக்கு மீளாய்வாண்டு இறுதிவரை இணக்கஞ் சான்றிதழ் வழங்கியிருக்கவில்லை. அதே போல் கட்டட அனுமதிப் பத்திரங்கள் கால நீடிப்பு செய்யாமை தொடர்பாக அல்லது இணக்கச் சான்றிதழ் இன்றி அக்கட்டடங்களை பயன்படுத்துவதற்கு எதிராக அல்லது சபையினால் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. அத்துடன், இணக்கச் சான்றிதழ் கட்டணம் மற்றும் தாமதக் கட்டணம் அறவீடு செய்தல் தொடர்பாக ஏற்பாடுகளும் சபையினால் ஏற்படுத்தியிருக்கவில்லை.

## 4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

------------------------------------------------------------------------------

### 4.1 பாதீட்டு கட்டுப்பாடு

------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக பாதீட்டின் மூலம் ரூபா 26,523,000 இற்கான மீண்டுவரும் வருமானம் ஒன்று மற்றும் ரூபா 49,500,000 இற்கான மூலதன வருமானம் ஒன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும், அவற்றில் சேகரிக்கப்பட்டிருந்தது மீண்டுவரும் வருமானத்தில் நூற்றிற்கு 20 ஆகிய ரூபா 5,568,000 உம் மற்றும் மூலதன வருமானத்தில் நூற்றிற்கு 64 ஆகிய ரூபா 31,714,000 மாத்திரமே.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) நிதிக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிருவாகம்

(உ) செயற்திட்டங்கள் அமுலாக்கல்